உ

சிவமயம்.

சதிபுருஷாளிருவரும்

புராணங்களைச்சொல்லி

# நெல்லுகுத்துகிறபதம்.

இஃது

கும்பகோணம்

பெரியக்கடைவீதியில்

புத்தகவியாபாரஞ்செய்யும்

## பெரியண்ணம்பிள்ளை

யவர்களால்

வீரணந்தோட்டம்

கோவிந்தநாயகரது

கல்விக்களஞ்சிய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

தாது ௵ வைகாசி ௴.

உ

சிவமயம்.

சதிபுருஷாளிருவரும் புராணங்களைச்சொல்லி

# நெல்லுகுத்துகிறபதம்.

1319

## விநாயகர்தோத்திரம்.

### வெண்பா.

கார்குழலார்மாதரெலாங் கண்டுகளித்திடவே
சீராய்நெல்குத்தும்விதஞ் செப்புகிறேன்-பார்மீதில்
மங்கைமணவாளனுமாய் மாரிநெல்குத்துதற்குத்
துங்கவைங்கரன்றாள் துணை.

## வள்ளியம்மன் சரித்திரம்.

ஆண். பிள்ளையார்தோத்திரஞ்சொல்லி-நல்ல
முரத்திலேநெல்லையள்ளி
குந்தாணியைநீதள்ளி
குத்தலன்டிவுன்பட்டாடைச்சொல்லி- அ ஆ உ ஊ

பெண். நெல்லுகுத்துறபதத்தே-நான்
சொல்லிவாறேனஃவிதத்தே
நில்லுநீவுலக்கைபிடித்தே
வல்லாளாயென்னுடன்குத்தே அ ஆ உ ஊ

சதிபுருஷாளிருவரும் புராணங்களைச்சொல்லி. 

ஆண். சுத்தரான்கேளடிமுத்தே- அழகு
குறத்திவள்ளிகதைசத்தே
என்மீதில்மனம்வைத்தே
யின்பமாய்சொல்லிகுத்தே - அ ஆ உ ஊ ௩

பெண். நாடுயென்றாலதுநாடு-நல்ல
பனங்காடுள்ளகுறநாடு
சுற்றிலும்வெகுகாடு
நடுவிலிருக்குமாம்வீடு-அ ஆ உ ஊ ௪

ஆண். சீக்கிரட்சொல்லடிமானே-உன்
சித்திரவாயாலேத்தானே
சூத்திரமாய்நெல்லேத்தேனே
சுருக்கினில்குத்துவன்நானே-அ ஆ உ ஊ ௫

பெண். வள்ளிபிறந்தாள்மான்வயிற்றில்-அவள்
தவ[illegible]பமுதாள் கானகத்தில்
கள்ளமில்லா வேடர்கிரகததில்
கொண்டுசென்றாரவர்க்ஷணத்தில்-அ ஆ உ ௬

ஆண். அவளேமாலேயிட்டதாரோ-பின்
அவர்பிறந்ததெய்வூரோ
சிவனருள்மைந்தனோரோ
நம்மவினைதீர்த்திடுவாரோ-அ ஆ உ ஊ ௭

பெண். ஐபன்சிவசுப்பிரமண்ணியன்-அவர்
அழகுபன்னிருகைகல்ராணியன்

மெய்யனருள்தருந்துய்யன்
மேதினிகார்த்திகேக்கையன்-அ ஆ உ

ஆண். ஆனந்தமாச்சுதுபெண்ணே-இப்
அப்புறம்சொல்லடிகண்ணே
தானதருமம்நீபண்ணே
தீனன்கதைமுடிமுன்னே-அ ஆ உ

பெண். புனத்தில்வள்ளியைக்கண்டார்-அ
தேனுந்தினைமாவுமுண்டார்
குணவதியைமணங்கொண்டார்
கூசாமற்றணிகையிற்சென்றார்-அ ஆ
வள்ளியம்மன்சரித்திரம்-முற்றி

இராமாயண சரித்திரம்.

ஆண். ராமாயணக்கதைச்சொல்லு-அவர்
நாமமனுதினமெல்லு
பாமரந்தன்னைநீதள்ளு
பகதர்பதந்துதிகொள்ளு-அ ஆ உ ஊ

பெண். கோட்டையென்றாலதுகோட்டை-
லங்காபுரிகோட்டை
கோட்டைவெகுநல்லதேட்டை
தங்காமற்சொல்லும்பாட்டை-அ ஆ உ

ஆண். கோட்டையையாண்டவனாரோ-அடி
கொம்பனேயேயென்னபேரோ

அவனைக்கொன்றவனாரோ
அவர்பிறந்ததெவ்வூரோ-அ ஆ உ ஊ ௰௩

பெண். ராமர்பிறந்ததையோத்தி-அந்த
ராட்சதிமாண்டதும்நேத்தி
ராஜரிஷிபாதம்போற்றி
ராகவன்பெற்றானேகீர்த்தி அ ஆ உ ௰௪

ஆண். ராமாயணக்கதையின்பம்-அதை
கேட்டாலகன்றிடுந்துன்பம்
யேதுக்குதவியிச்சென்மம்
யிப்போதேநீங்கிடுங்கன்மம் அ ஆ உ ௰௫

பெண். சீதைதனைமாலையிட்டு-உடனே
சிறப்பாய்மிதிலையைவிட்டு
சேனையெல்லாம்நிலைகெட்டு
சேர்ந்தாரெல்லாம்ஒருதிட்டு-அ ஆ உ ௰௬

ஆண். அப்புறஞ்சொல்லடிமானே-நல்
லன்புடன்கேட்கவேநானே
துன்பமகன்றிடும்தேனே
துரிதமாய்ச்சொல்லுநீதானே அ ஆ உ ௰௭

பெண். பரசுராமன்வந்துதடுக்க-ஸ்ரீ
பரந்தாமனவனையொடுக்க
அரசுபட்டமதைகொடுக்க
அப்பாவிகைகேசிகெடுக்க-அ ஆ உ ௰௮

# நெல்லுகுத்துகிறபதம்.

ஆண். அந்திவேளையாச்சிமானே-கதை
முந்திசொல்லுநீதானே
யெந்தனுக்கினியதேனே
யேதென்றுசொல்லுவன்நானே அ ஆ உ ௰௯

பெண், அன்புடன்தாய்சொல்லைக்கேட்டு-ராமன்
அப்பொழுதையோத்திவீட்டு
சித்திரகூடமதுநெட்டு
சேர்ந்தார்கள்மூவரும்வொத்து அ ஆ உ ௨௰

ஆண். அப்புறஞ்சொல்லடிசேதி-இது
அப்பப்பாயிதன்னீதி
அப்பால்நடந்ததோர்சேதி
தெப்பெனச்சொல்அடுப்பூதி அ ஆ உ ௨௧

பெண். ராவணன்சிதையையெடுக்க-ஸ்ரீ
ராமனுதன்கண்டுபிடிக்க
ராகவன்சரத்கால்துடிக்க
ராச்சியம்ஆண்டானெனப்படிக்க அ ஆ உ ௨௨

ஆண். சொன்னதுபோதும்பெண்ணே-இப்போ
சுகிர்தமாநேரம்நாழிவ்வேளை
முன்னேவீடுசெல்வோங்கண்ணே
மூவுலகும்வாழிபெண்ணே அ ஆ உ ஊ ௨௩

நெல்குத்துகிறபதம்

முற்றிற்று.

கடவுள் துணை.

வெண்பா

பார்மீதுஈன்றாய் பனங்கட் குடித்தாடும்
பேர்போனகந்தப் பிரம்பூரு-நேராக
சீராய்பின்வாரும் சினேகிதரேநாம்கூடி
பூராயமாய்க்குடிப்போ மிப்போது

பதார்த்தசிந்தாமணிபதம்-இ-ம-இலாவணி தாளம்ஆதி.

பல்லவி.

கள்ளுகொள்வோரும் சிந்தாமணி-கனைகள்தெளியப்பாரும்

அநுபல்லவி.

கொள்ளுபயறுமொச்சை யள்ளியேகொடுத்தால்
குறையாமலொருஜாடி நிறையவேகுடிப்போம் கள்ளு

சரணங்கள்.

எட்டுக்கைகறிதோசை-கொடுத்தால்-விட்டுப்போமென்றாசை
திட்டமாய்கொழும்பது கட்டிவரும்படி
தேடிநல்லப்பொருளை யோடிநீகொள்வாடு கள்ளு

ஊர்நெத்திலிப்பாவை-நல்ல-உளுவைமீன்கறிதேவை
பாரையும்வஞ்சிரம் வவ்வாலாகாது
மசிக்கிப்பொசிக்கிமிக ருசிக்கவேகொண்டுவா கள்ளு

வாளைக்குழம்புசிராய் கூட-வறுத்தயிரலும்பாராய்
கோர்த்துச்சுட்டகறி பார்த்தும்பாராமலே
குலையுந்தலையுமுருக்கிலையுடன்கொண்டுவா கள்ளு

தித்திப்புப்பாட்டாவொடு-கலந்து-திரும்பியோர்குலைகொடு
எத்தனை துலைதூரம்நடந்தியேவந்தோம்
இதுவரையதினுடதிறமையைக்காணோம் கள்ளு

எந்தயிடத்துகள்ளு-மாதே-யிதையறிந்திடச்சொல்லு
அந்தாம்புவியும்பந்துபோல்சுழண்டு
ஆடியேதலையேவோடியேவருது கள்ளு

ஆட்டமாடவருது-சிறிது-பாட்டுப்பாடத்தெரிது
கோட்டையையிடித்துபோட்டிடப்பிலமும்
கூட்டிக்கொடுத்தக்கள்ளுமேட்டிமையென்சொல்வேன் கள்ளு

கத்திசிறுத்தைக்கோலும்-கையில்-கனத்தத்திருக்கைவாலும்
இத்தனையிருந்தால்சுத்திலுமிருப்போனா
யிறுக்குதேநொறுக்குவேன்முறுக்குவேன்மீசை கள்ளு

குடியர்பதார்த்தசிந்தாமணிபதம்-முற்றிற்று.